மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 6–9–2011, செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

37. (i) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மத்திய காவல் படை கேண்டீன் மையங்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விற்பனை செய்யும் யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமெண்ட், மது, ஆல்கஹால் கலந்த பானங்கள் ஆகியவை நீங்கலாக) மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மத்திய காவல் படை கேண்டீன் மையங்களுக்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து

2011 செப்டம்பர் 5]

அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், மத்திய காவல் படை போன்று இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாநில காவல் படை கேண்டீனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யும் யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமெண்ட், மது, ஆல்கஹால் கலந்த பானங்கள் ஆகியவை நீங்கலாக) மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; மற்றும் (iv) இம்மாநிலத்தில், மாநில காவல் துறை பணியாளர்களுக்கும், ஓய்வுபெற்றவர்களுக்கும் ஏற்படுத்தப்படவுள்ள மாநில காவல் படை கேண்டீனுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *28–2–2011* ஆம் நாளிட்ட *38* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *86 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் *29–6–2011* ஆம் நாளிட்ட *54* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983*) *180(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

89. மானியக் கோரிக்கை எண் *4*–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2011–2012*. (தமிழ், ஆங்கிலம்)

90. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 'மக்கள் சாசனம்'. (தமிழ், ஆங்கிலம்)

91. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு–செலவு செயலாக்கத் திட்டம், *2011–2012*. (தமிழ், ஆங்கிலம்)